## அலகு– 5

## பொதுமக்களுக்கான செய்திப்பரப்பு ஊடகங்களும் பாலினமும்

**ஊடகங்கள்**

ஊடகங்கள் பொதுமக்களுக்கு தகவல்களை உடனுக்குடன் அளிக்கும் சாதனங்களாகும். இவை பல வழிமுறைகளில் பொதுமக்களின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைவதால் பொதுமக்களுக்கான செய்தி பரப்பு ஊடகங்கள் என அழைக்கப்படுகின்றன.

இவை நாட்டுநடப்புகள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அறிவியல் செய்திகள் விளையாட்டு வர்ணனைகள் போன்றவற்றை பாமர மக்களுக்கும் குறைந்த பொருட் செலவில் கொண்டு சேர்க்கின்றன.

**பொதுமக்களுக்கான செய்திப்பரப்பு ஊடகம்**

- தகவல் மூலங்களிலிருந்து செய்திகளை சுமந்து சென்று பெறுபவரிடம் சேர்ப்பித்திடும் சாதனங்களே ஊடகங்கள் அல்லது வாயில்கள் என்று இரோமிஸெளஸ்கி வரையறுக்கிறார்.
- ஓரிடத்தில் தயாராகும் தகவல்களை உயர்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரே நேரத்தில் வெகுதூரத்திமல் உள்ளவர்களிடம் கொண்டுசெல்லும் சாதனமே வெகுஜன செய்திப்பரப்பு ஊடகம் ஆகும்.
- அச்சிடுதல் ஒலிபரப்புதல் ஒளிபரப்புதல் ஆகியவற்றில் உள்ள உயர்தொழில்நுட்பங்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ பயன்படுத்தி பேரளவில் தகவல்களை சேகரித்து அனைத்து மக்களுக்கும் அளித்திடும் சாதனங்களே பொதுமக்களுக்கான செய்திப்பரப்பு ஊடகங்கள் ஆகும்.

**பொதுமக்களுக்கான செய்திப்பரப்பு ஊடகங்களின் வகைப்பாடு**

**அச்சுசார் ஊடகங்கள்**

இவை தகவல்களை எழுத்து வடிவில் அல்லது சித்திரவடிவில் அச்சிட்டு பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கின்றன.

உதாரணமாக - செய்தித்தாள்கள் வார மாத மற்றும் பருவஇதழ்களும் நூல்களும்

**ஒலிசார் ஊடகங்கள்**

இவை தகவல்களை ஒலிவடிவத்தில் பொதுமக்களிடம் சேர்ப்பிக்கின்றன.

உதாரணமாக - வானொலி ஒலிபரப்பு ஒலிநாடா ஒலிப்பேழை ஒலித்தகடு

**மின்னணு ஊடகங்கள்**

இவை தகவல்களை ஒலி மற்றும் காட்சி வடிவில் பொதுமக்களிடம் சேர்ப்பிக்கின்றன.

உதாரணமாக - தொலைக்காட்சி கணினி இணையதளம் திரைப்படங்கள் குறும்படங்கள் விளம்பரச்சுருள்கள்

**பொதுமக்களுக்கான செய்திப்பரப்பு ஊடகங்களில் பாலினபங்கு பணிகள்:**

- ஊடகங்களில் தோன்றும் ஆண்கள் மற்றும் பெண்களின் தொழில்சார் அந்தஸ்து சமமற்றதாகவே உள்ளது.
- பெண்களுக்கு பெற்றோராக செயல்படும் பொறுப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுவதும் ஆண்களுக்கு வேலைசார்ந்த பொறுப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுவதும் ஊடகங்களின் வாயிலாக வெளிப்படுகின்றன.
- உலகெங்கிலும் உள்ள பிரபல நாளேடுகளிலும் பருவ இதழ்களிலும் பெண்களை விட ஆண்கள் வாழ்க்கைத் தொழில்சார் சூழலில் இருமடங்கு அதிகமாக சித்தரிக்கப்படுகின்றன.
- பொதுமக்களுக்கான செய்திப்பரப்பு ஊடகங்களில் பாலினம் தொடர்பான சார்பெண்ணங்கள்
- ஆண்தன்மை மற்றும் பெண்தன்மை குறித்து சமூகம் கொண்டுள்ள ஆதாரமற்ற நம்பிக்கைகளே பாலினம் தொடர்பான சார்பெண்ணங்கள் ஆகும்.

- பாலின சார்பெண்ணங்களில் குறிப்பிட்ட சமூகம் பெண்களையும் ஆண்களையும் பின்வரும் மூன்று அம்சங்களில் வேறுபடுத்திடுவதால் உருவாகின்றன.

  சமூகபங்கு பணிகள்

  பாலின ஆற்றல்கள்

  ஆளுமைக்கூறுகள் மற்றும் இயல்புகள்

- ஊடகங்கள் பெரும்பாலும் பெண்களை மென்மையானவர்களாகவும் பிறருடன் இணக்கமாகச் செயல்படுபவர்களாகவும் எளிதில் உணர்ச்சி வயப்படுபவர்களாகவும் தமது புறத்தோற்றத்தில் அதிக அக்கறை காட்டுபவர்களாகவும் சித்தரிக்கிறது.
- ஊடகங்களில் தோன்றும் பெண்களின் ஆடையலங்காரம் ஆடவர் மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கின்றன.
- பாலினசார்பு எண்ணங்களுக்கு மாறாக பெண் ஆண் பாலினஉடையை அணிதலும் ஆடவர்கள் பெண்பாலினத்தவரது பணிகளாகக் கருதப்படும் வீட்டுவேலைகளை செய்தலும் ஊடகங்களில் கேலிக்குரியதாக சித்தரிக்கப்படுகின்றன.

**பாலின தன்அடையாள பங்குபணிகள்**

- ஒருவர் தன்னை ஆண் அல்லது பெண் என உணரும் உள்ளார்ந்த அனுபவமே பாலின தன்அடையாளம் ஆகும்.
- பாலின பங்குபணிகள் என்பது ஒருவர் தன்னை ஆண் அல்லது பெண்ணாக வெளிப்படுத்திக்கொள்ளும் நடத்தைகள் மனப்பான்மைகள் நடையுடை பாவனைகள் ஆகும்.
- பாலின பங்கு பணிகளில் ஒருவரது சமூக மற்றும் சட்டரீதியான அடையாளம் உள்ளடங்கியது ஆகும்.
- குழந்தைகளிடம் பாலின தன்அடையாள மாறாத்தன்மை 6 முதல் 7 வயதிற்குள் ஏற்படுகிறது.
- குழந்தை தான் தோற்றத்திலும் வயதிலும் வளர்ந்துவிட்டாலும் வேறுபட்ட உடையலங்காரத்தை மேற்கொண்டாலும் தனது பாலின அடையாளம் மாறாது என உணர்கிறது.

- பொதுவாக குமரப்பருவத்தின் போது தோன்றும் உடல்சார் மாறுபாடுகள் பாலின தன்அடையாளத்துடன் ஒன்றிணைந்திட வேண்டும்.
- பாலின தன்அடையாளமும் பாலின பங்குபணிகளும் பாலுறவுகளும் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு காணப்படுகின்றன.
- ஒரு ஆண் ஆணுக்குரிய பாலுறுப்புகள் கொண்டு தன்னை ஆணாக அடையாளப்படுத்திக்கொண்டு ஆணுக்குரிய பங்கு பணிகளில் ஈடுபடுவதும் ஒரு பெண் பெண்ணுக்குரிய பாலுறுப்புகள் கொண்டு தன்னை பெண்ணாக அடையாளப்படுத்திக்கொண்டு பெண்ணுக்குரிய பங்கு பணிகளில் ஈடுபடுவதும் சமூகத்தில் அனைவரிடமும் காணப்படுகிறது ஆனால் குறிப்பிட்ட பாலின உறுப்புகள் கொண்டிருந்தாலும் தம்மை எதிர்பாலித்தவராக உணரும் மூன்றாம் பாலினத்தவரது நடத்தைகள் பாலின பங்கு பணிகளோடு பொருந்திப் போவதில்லை.

**உடல் குறித்த உடன்பாட்டு கற்பிதங்கள்**

1. உடலின் நிறமோ உருவமோ அதிக முக்கியத்துவம் உடையவை அல்ல என்றும் உடலுறுப்புகளை நன்கு இயக்கி பணிகளை சிறப்புடன் செய்தலே மிக முக்கியமானது என்றும் உடல் தொடர்பான உடன்பாட்டுக் கருத்துக்களை மாணவர் மனதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் விதைத்தல் வேண்டும்.
2. உடல் என்பது கவர்ச்சிப் பொருளோ போகப் பொருளோ இல்லை திறம்படச் செயல்படுவதற்கான ஒரு கருவி அதனை பயிற்சி மூலம் மேம்படுத்திடவும் செய்திறன்களைக் கற்றுக்கொள்ள பயன்படுத்திட வேண்டும் என்பதனையும் மாணவர்களுக்கு உணர்த்தவேண்டும்.
3. ஒருவர் தமது ஆளுமையை வெளிப்படுத்துவதற்கான சாதனமே உடல் என்ற உடன்பாட்டு மனப்பான்மையை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும்.
4. உடல் குறித்த உடன்பாட்டு மனபிம்பத்தை உருவாக்கிடுவதற்கான வழிமுறைகள்:
5. தமது உடல் உறுப்புகளைக் கொண்டு தம்மால் செய்திடக்கூடிய சாதனைகளை நினைத்து பெருமிதம் கொள்ளுதல்.

6. அழகு என்பது மனநிலையே அன்றி உடலின் புறத்தோற்ற நிலையில் இல்லை என்பது உணர்ந்தறியச் செய்யப்பட வேண்டும்
7. உடல் குறித்த உடன்பாட்டு மனப்பான்மை கொண்டவர்களிடம் அதிகமாகப்பழக வேண்டும்.
8. நம் உடல் வாகுக்கேற்ற உடைகளையே அணிதல் வேண்டும்.
9. உடல்குறித்த எதிர்மறை மனப்பான்மைகளைப் புறந்தள்ளி நம்மிடம் உள்ள சிறப்புப் பண்புகளையும் ஆற்றல்களையும் நினைவு கூற வேண்டும்.
10. சமூகத்திலும் ஊடகங்களிலிருந்து வரும் உடல் குறித்த பல்வேறு தகவல்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் ஆழ்ந்து பரிசீலித்தல் வேண்டும்.
11. நாம் நமது தன் அடையாளத்தை உடல் தோற்றத்தைக் கொண்டும் அதுபற்றி பிறர்கூறிடுவதையும் கருத்தில் கொள்ளாமல் நமது ஆற்றல்கள் மற்றும் திறன்களின் அடிப்படையில் உருவாக்கிக் கொள்வதே உடல் குறித்த உடன்பாட்டு மனப்பான்மையைத் தோற்றுவிக்கும் வழிமுறையாகும்.

**தான் என்பது குறித்த உடன்பாட்டு கற்பிதங்கள்**

- ஒருவர் தான் என்பது குறித்த உடன்பாட்டு மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டுமேயானால் அவர்தனது தற்கருத்தையும் தன்மதிப்பையும் மேம்படுத்திக்கொண்டு தன்னம்பிக்கை மிக்கவராக விளங்குதல் அவசியமாகும்.
- தான் ஆற்றிடும் சிறந்த செயல்கள் பணிகள் மற்றும் தனது தனித்தன்மைகள் பற்றி அவ்வப்போது சிந்தித்தல்
- தனது கல்வியில் அதிக கவனம் செலுத்துதல்
- பலவகை செயல்களிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்று சுயசெயல்திறனை மேம்படுத்திக்கொள்ளுதல்
- புதிய ஓய்வுநேர வேலையை மேற்கொள்ளுதல் அல்லது இசைக்கருவியை வாசிக்கக் கற்றுக்கொள்ளுதல்
- புதிய இலக்குகளை நிர்ணயித்து அவற்றை எய்திட முயற்சித்தல்
- மற்றவர்களுக்கு எழுச்சியூட்டும் நபராக விளங்குதல்

- தற்கருத்தையும் தன்மதிப்பையும் தொடர்ந்து  மேம்படுத்திக் கொள்வதன்மூலம் ஒருவர் தான் என்பது பற்றிய உடன்பாட்டு மனப்பான்மையை நிலைநிறுத்திக்கொள்ள முடியும். ஆத்தகையோருக்கு வாழ்வு என்றும் பொருள் பொதிந்ததாகவும் பயனுள்ளதாகவும் காட்சியளிக்கும். வாழ்க்கையில் எத்தருணத்திலும் சோர்வுறார்.

**பொதுமக்களுக்கான தகவல் பரப்பு ஊடகங்களில் பாலின சித்தரிப்பு**

இந்திய தகவல்பரப்பு ஊடகங்களில் பெண்களின் உடல் கவர்ச்சிப் பொருளாகவும் போகப்பொருளாகவும் சித்தரிக்கப்படுகின்றன. ஆண்கள் உடல் வலிமை மிக்கவர்களாகவும் சாதனையாளர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றர்.

இதழ்கள் வானொலி ஒலிபரப்பு  தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் திரைப்படங்கள் கேலிச்சித்திரங்கள் விளம்பரங்கள் போன்றவற்றில் ஆண்கள் மற்றும் பெண்கள் சித்தரிக்கபடும் விதத்தைக் காண்போம்.

**இதழ்கள்:**

- இதழ்களில் பாலின சித்தரிப்பு:
- இதழ்கள் பெண்கள் வலிமை மிக்கவர்களாகவும் ஆண்களோடு எதிலும் போட்டி போடும் தன்மை கொண்டு விளங்குவதாகவும் வர்ணிக்கிறார்.
- இந்தியா போன்ற நாடுகளில் இதழ்கள் பெண்களுக்கான இயல்புநியதிகளாக வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல் உணவு தயாரித்தல் குழந்தை வளர்ப்பு பின்னல் வேலைகள் அழகுசார் கைவினைப் பொருட்களைத்தயாரித்தல் போன்றவற்றிற்கு அதிக இடம் அளித்து வந்தன.ஆனால் தற்போது இந்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது.
- இன்றைய சூழலில் இதழ்கள் பால்உறவு பால்உணர்வு ஆண் - பெண் உறவு நவநாகரீகம் பெண்கள் வேலைக்குச் செல்லுதல் உயர்பதவி வகித்தல் பெண்களுக்கு அதிகாரம் வழங்கல் போன்றவற்றிற்கு இடம் அளிக்கத்தொடங்கியுள்ளன.

- பெண்ணியச்சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் கவிஞர்களும் நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றனர். சில சமூக இயக்கங்களும் பெண் உயர்வுக்காக செயல்பட்டுவருகின்றன.

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

- தொலைக்காட்சி நிறுவனங்கள் பல புதிய நிகழ்ச்சிகளையும் சிறப்புநிகழ்ச்சிகளின் நேரடி ஒளிபரப்புகள் எண்ணற்ற விளம்பரங்கள் போன்றவற்றையும் ஒளிபரப்பி வருகின்றன.
- படித்தல் கேட்டலை விட இக்காட்சி – கேள்வி கருவி இனிமையானதாகவே பொதுமக்கள் பார்வையில் காணப்படுகிறது.
- சமூகக்கல்வி பொது அறிவு நாட்டுநடப்பு ஆகியவற்றை மக்கள் பெற்று இன்புற அரியசாதனமாக தொலைக்காட்சி விளங்குகிறது.
- பொதுவாக பெண்மையை தாழ்த்தியும் ஆண்மையை உயர்த்தியும் காட்டும் விதமாகவே பெரும்பாலான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அமைகின்றன. பெண்மையைப் போற்றும் கருத்துகளும் பெண் விடுதலைக்கான கருத்துச்செறிவுள்ள நிகழ்ச்சிகளும் அவ்வப்போது இடம்பெறும்.
- தற்போதைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெண்களை தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும் ஆண்களைப்போல் அலுவலகங்களில் பணிபுரிபவர்களாகவும் கல்லூரிகளில் படிப்பவர்களாகவும் சாகச நிகழ்ச்சிகள் புரிபவர்களாகவும் சாதனையாளர்களாகவும் காட்சிப்படுத்த முன்வந்திருப்பது வரவேற்புக்குரிய ஒன்றாகும்.

**கேலிப்படங்கள்**

இவை சிறுவர்களுக்கான தொலைக்காட்சியில் பிரபலமானவையாக விளங்குகின்றன. மனிதர்கள் பற்றிய கார்ட்டூன்களில் சூப்பர்மேன் ஸ்பைடர்மேன் போன்றவர்களது வீரதீர சாகசங்கள் ஆண்பாலினத்தின் துணிவையும் வலிமையையும் வெளிப்படுத்துவனவாக இருக்கும். இத்தகைய படங்களில் வரும் பெண் பாத்திரங்கள் நளினம் ஒல்லியான தோற்றம் விழிஅழகு போன்ற பாலின இயல்புகளாக மக்கள் கொண்டுள்ள கருத்துகளோடு உடன்பட்டிருக்கும்.

சில கேலிச்சித்திரங்களில் பெண் ஆணுடையயை ஒத்த உடையணிந்தும் ஆடவர் செய்துவரும் பணிகளைச் செய்து வருவதையும் ஆடவர்கள் பெண்பாலினத்தவரது பணிகளாகக் கருதப்படும் வீட்டுவேலைகளை செய்தல் போன்றவை கேலிக்கூத்தாக கருதப்படுகிறது. இத்தகைய படங்கள் கேலிக்குள்ளாக்குவது பெண்ணாகவே பெரும்பாலும் இருக்கும்.

**திரைப்படங்கள்**

திரைப்படங்கள் சக்தி வாய்ந்த ஊடகங்களாக விளங்குகின்றன. இவை பாமர மக்களும் இளம் வயதினரும் கண்டு மகிழும் இனிய பொழுதுபோக்குகளாக உள்ளன. ஆனால் அத்திரைப்படங்களில் கதாநாயகனுக்கே உரையாடல்களில் அதிக சொற்கள் தரப்படுகின்றன. காட்சிகளில் அவரே கதாநாயகியை விட அதிகநேரம் இடம்பெறுகிறார்.

திரைப்படங்களில் கதாநாயிடம் எதிர்பார்ப்பது கவர்ச்சி குழைவு கொஞ்சுதல் அலங்காரம் நடனத்திறமை போன்றவையாகும். மேலும் கதைகளில் ஆதரவற்ற நிலையிலுள்ள பெண்ணாக கதாநாயகி இருப்பதும் அவளை எல்லாவித இடர்களிலிருந்து காக்கும் தெய்வமாக கதாநாயகன் மின்னல் போல தோன்றுவதும் பல படங்களில் கண்டிருக்கிறோம்.இக்காட்சிகள் பெண் ஆண்களையே நம்பி வாழ வேண்டியவர்கள் என்கிற கருத்தை வலுப்பெறச்செய்கிறது.

**விளம்பரங்கள்**

- தற்போது விளம்பரங்களே ஊடகங்களின் மூச்சுக்காற்றாக உள்ளன.தற்போது விளம்பரங்கள் ஒரு புதிய உற்பத்திப் பண்டத்தை அறிமுகம் செய்யவும் பொருள்கள் கிடைக்குமிடம் விலை ஆகியவற்றை மக்கள் அறியச் செய்யவும் தொண்டு நிறுவனங்கள் நிதி திரட்டவும் வேலைவாய்ப்பு கல்வி நிலையங்களில் மாணாக்கர் சேர்க்கை மணமக்கள் தேவை போன்ற செய்திகளை மக்களிடம் கொண்டு செல்லவும் உதவுகின்றன.
- பெண்கள் காட்சிப்பொருளாக விளம்பரங்களில் பயன்படுத்தப்படுகின்றனர்.
- பெண்கள் பயன்படுத்தும் ஆடைகள் நகைகள் பற்றி மட்டுமின்றி அழகு சாதனப்பொருட்கள் வீட்டு உபயோகப்பொருட்கள் பற்றிய விளம்பரத்தில் பெண்களை பயன்படுத்திக்கொள்வதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ஆண்கள் மட்டுமே

பயன்படுத்தும் பொருட்களிலும் அவற்றை பயன்படுத்தும் ஆடவரை பெண்கள் சூழ்ந்து வருவதாகக் காண்பிப்பதும் பெண்களை இழிவுபடுத்தும்செயலாகும்.

- விளம்பரங்கள் பெண்களை கவர்ச்சியூட்டும் ஊக்கிகளாகவே பயன்படுத்துகின்றன.

**மொழிப் பயன்பாடும் பாலின சமத்துவமும்:**

மொழியைக் கையாளும் எழுத்தாளர்கள் பயன்படுத்தும் சொற்கள் பொதுவாகப் பெண்களை ஆண்களை விடத் தாழ்வானவர்கள் அடுத்த நிலையில் உள்ளவர்கள் என்பதை மறைமுகமாக உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன. இத்தகைய பாலின சமத்துவமமின்மையை உணர்த்தும் மொழிப்பயன்பாடு 4 வகைகளில் அமைந்துள்ளது.

1.**ஆண்பெண் இணைச்சொற்களில் சமத்துவமின்மை**

ஆண் மற்றும் பெண் உறவுநிலையைக் குறிப்பிடும் இணைச்சொற்கள் உண்மையிலேயே சமமற்ற தன்மையுடன் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக– ளுசை என்பது ஆணைக்குறிப்பிடுவதற்கும் ஆயனயஅ – என்ற சொல் பெண்ணைக் குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்பட்ட போதிலும் பெண்ணைக்குறிக்கும் சொல் காலப்போக்கில் மதிப்பு குன்றி எதர்மறையான பொருளில் வழங்கப்பெறுகிறது.

**2.பெண்ணைக் குறிப்பிடும் சொற்கள் ஆணைக் குறிப்பிடும் சொற்களிலிருந்து வருவிக்கப்பட்டவையாக அமைந்திருத்தல்**

Actor – Actress

Mister – Mistress

Chairman – Chairwomen

போன்ற சொற்கள் ஆண்களைக் குறிப்பிடும் சொற்களிலிருந்து வருவிக்கப்பட்டு பெண் இரண்டாம் நிலையில் அமைந்திருப்பதாக உணரப்படுகின்றன.

3.**பொதுவான கருத்தை வெளிப்படுத்துவதிலும் ஆணைக் குறிப்பிடும் சொற்களே பயன்படுத்தப்படுதல்**

Mankind – மனிதகுலம் (Human kind)

Man power – மனித சக்தி (Human ppower)

All neb are created equal – All Human beings are created equal எனக் குறிப்பிடலாம்.

4.**பாலின நடுநிலை வார்த்தைப் பிரயோகங்கள் கூட பாலின வேறுபாட்டை உணர்த்துவதாக அமைந்திருத்தல்**

பாலின நடுநிலை வார்த்தைகளாகக் கருதப்படும் person, member, scientist dictor போன்ற சொற்களும் ஆணைக் குறிப்பதாகவே தவறுதலாக மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டப்படுகின்றன. இத்தகைய மொழிப் பயன்பாடு பாலினசார் வார்ப்பட எண்ணங்களின் வெளிப்பாடாகும்.